1987 ஏப்ரல் 20]

தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்காவை பிரித்தல்.

402—(*வினா எண் 12595) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்காவைப் பிரித்து குத்தாலம் தாலுக்காவாக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 10-10)

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை தாலுக்கா மிகப் பெரிய தாலுக்காவாக இருக்கிற காரணத்தாலும் பொதுமக்கள் அன்றாடம் வருவாய்த் துறையிலே பல காரியங்களைச் செய்துகொள்ள சுமார் 40, 50 கிலோ மீட்டர் செல்ல வேண்டியிருக்கிற காரணத்தாலும் வருவாய்த்துறை அதிகாரிகள் கிராமங்களில் அவ்வப்போது பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க முடியாத காரணத்தாலும் அரசு பரிசீலித்து மயிலாடுதுறையிலிருந்து குத்தாலத்தை தனி தாலுக்காவாகப் பிரிக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இப்பொழுது வட்டங்களினுடைய பரப்பளவு, மக்கள் தொகை, நில வரி, மற்றும் பிற்பட்ட தன்மை ஆகியவற்றை எல்லாம் கணக்கிலே வைத்துக் கொண்டுதான் வட்டங்களை இரண்டாகப் பிரிக்கின்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மயிலாடுதுறை வட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற செயற்குறிப்பு தற்போது அரசினுடைய ஆய்விலே இல்லை. அதுபற்றிய தன்மைகள் வருகின்றபொழுது தஞ்சை மாவட்டத்தை இரண்டு மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது கோட்டங்களாகவும் வட்டங்களாகவும் வேறு புது கோட்டங்கள், வட்டங்கள் பிரிக்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது, அதையும் சேர்த்து கவ

னிக்க வேண்டுமென்று ஒரு செயற்குறிப்பை குழுவிடத்திலே நாம் தருகிறோம். அவர்கள் அதுபற்றியும் பரிசீலிப்பார்கள். இப்பொழுது அதுபற்றிய செயற்குறிப்பு இல்லையென்று குறிப்பிட்டேன்.

குமரி மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி துவங்கல்.

403—(*வினா எண் 6533) டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் புதிதாக ஆங்கில முறை மருத்துவ கல்லூரியோ அல்லது சித்த மருத்துவ கல்லூரியோ தொடங்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன, என்ன காரணங்களால் அங்கே மருத்துவக் கல்லூரியோ, சித்த மருத்துவக் கல்லூரியோ அமைக்க வாய்ப்பில்லையென்று அமைச்சர் அவர்கள் சொல்ல முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவ மற்றும் மருத்துவத் துறைக் கல்லூரிகள் இரண்டும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், திருநெல்வேலியிலே இருக்கிற காரணத்தால் அருகில் ஒரு மருத்துவக் கல்லூரி துவக்குவதற்கு வாய்ப்புகள் இல்லையென்று சொன்னேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான ப்ரஃபொஷனல் கோர்சஸ் கல்லூரிகளும் கிடையாது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அங்கே சித்த மருத்துவ முறைகளில் புகழ்பெற்ற மேதைகள் இருக்கின்ற